## பத்திரிக்கைச் செய்தி

## வாக்காளர் பட்டியலை துாய்மைப்படுத்த சிறப்பு களப்பணி ஆய்வு மற்றும் கிராமசபா

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இடம்பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், இரட்டைப்பதிவு வாக்காளர்களை நீக்கி வாக்காளர் பட்டியலை துாய்மைப்படுத்தும் பணி **15.02.2016 முதல் 29.02.2016 வரை கள ஆய்வு பணி** நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்காக வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் வாக்காளர்பட்டியலுடன் வீடு வீடாக சென்று சரிபார்ப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர். மேற்கண்ட பணிக்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் களப்பணிக்கு பணி செய்து பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அவர்களது குடியிருப்பு பகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெயர்ந்த வாக்காளர்கள், இறந்த வாக்காளர்கள், இரட்டைப்பதிவுகள் உடைய வாக்காளர்கள்குறித்த நீக்கல் விபரப்பட்டியல்கள் அரசியல் கட்சிப்பிரதிநிதிகளிடம் வழங்கப்பட்டு அதன் பிரதி 22.2.2016 அன்று நடை பெற்ற கிராம சபாக்கூட்டங்களில் வைக்கப்பட்டது.. பின் அப்பட்டியல் சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலகத்திலும். மாநிலத்தேர்தல் ஆணைய இணைய தளத்திலும் வெளியிடப்பட்டது.

மேலும், வாக்குச்சாவடிநிலை அலுவலர்கள் மீண்டும் 25.2.2016 அன்று மீண்டும் களப்பணி ஆய்வு செய்ய உள்ளனர்.அப்போது வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனைக்குரிய பதிவுகள் இருப்பின் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் அவை குறித்த பட்டியலை வாக்காளர் பதிவு அலுவலகங்களிலும் உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்களிலும் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் அளிக்கலாம். மேலும் மேற்படி பட்டியலை **26.02.2016 அன்று மீண்டும் நடைபெறவுள்ள சிறப்பு கிராமசபா கூட்டத்தில்** கூட்டப்பொருளாக வைத்து அங்கீகாரம் பெறவும் உள்ளனர்.அப்போது பட்டியலில் கண்டுள்ள நீக்கம் செய்யும் வாக்காளர் குறித்து ஆட்சேபணை ஏதும் இருப்பின் பதிவு செய்யவும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள்.

மேலும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களின் கள ஆய்வுக்குப்பின் மேற்படி பதிவுகள் குறித்த நீக்கல் பட்டியல் முதன்மை தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சியரின் இணையதள முகவரியிலும் வெளியிடப்பட்டுள்ளது. வாக்காளர் பதிவு அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுளளது. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுக்கும் மேற்படி நீக்கல் பட்டியல் பார்வைக்கு அளிக்கப்படும். களப்பணி ஆய்வினைத்தொடர்ந்து தொடர்ந்து நீக்கப்படும் வாக்காளர்களுக்கு உரிய காலஅவகாசம் அளித்து எழுத்து மூலம் அறிவிப்பு அளிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே பொதுமக்கள் மற்றும் அரசியல்கட்சி பிரமுகர்கள் இப்பணிக்கு தங்களின் முழு ஒத்துழைப்பையும் அளிக்குமாறு மாவட்டஆட்சியர் கேட்டுக் கொள்கிறார்.

ஒம்/-xxxxxxxxx

மாவட்ட ஆட்சியர்

இராமநாதபுரம்